

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 57வது பிறந்த தினத்தையொட்ட நகர பஸ் நிலையம் அருகேயுள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர். ஜி.கே.சுபாசு பொருளாளர் மு.கார்திகேயன் தலைமைச் செயற்குழு கே.டி.மணி தேர்தல் பார்வையாளர். ஈ.ஜி.சுகவனம், மாநகர மேயர். ஆ.ராமச்சந்திரன், மாநகர செயலாளர் பா.ரகுபதி, அவைத் தலைவர் கே.ஆர்.முருகன், பொதுக் குழு உறுப்பினர்கள் பூபதி, சா.சுப்பிரமணி, பி. அசோகன், பகுதி செயலாளர்கள் தமிழரசன், ஏ.எஸ். சரவணன், கேபிள் ராஜா, கோட்டை இப்ரகீம், கே.டிஆர் தனசேகரன், ஒன்றிய செயலாளர்கள் ரெயின்போ நடராஜன், செல்வகுமரன், அய்யப்பன், ஓ.எம்.ரமேஷ், பாலசுப்பிரமணியன், கே.சி. அறிவழகன், ரவிச்சந்திரன், மண்டல தலைவர் எம்.அசோகன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாகை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# சிக்கல் என்.ஆனந்த் தாயார் வேதவள்ளி மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

*கீழ்வேளூர், பிப். 4 -*

நாகை மாவட்டம் நாகை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சிக்கல் என். ஆனந்த் தாயார் என். வேதவள்ளி (வயது 80) நேற்று ( 3.2.2026) காலை 8 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம்.

மறைந்த என்.வேதவள்ளிக்கு மகன்கள் என்.ரவிச் சந்திரன், என். சண்முகம், என்.ஆனந்த், மகள் தமிழ்ச் செல்விகாளிதாஸ் ஆகியோர் உள்ளனர்.நாகை மாவட்டம் சிக்கல் கீழவீதியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள என். வேதவள்ளி உடலுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று மரியாதை செலுத்தினார்கள். அம்மையாருடைய இறுதி ஊர்வலம் இன்று (4.2.2026) மதியம் ஒரு மணி அளவில் நடைபெறுகிறது.



பேரறிஞர் அண்ணாவின் 57 வது நினைவு தினத்தை முன்னிட்டு நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா .மதிவேந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் பார்.இளங்கோவன் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி துணை மேயரும், கிழக்கு நகர செயலாளருமான செபூபதி, நாமக்கல் நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த், அ.சிவக்குமார், டாக்டர் மாயவன், ராணி பெரியண்ணன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், , கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சோ.கி. மூர்த்தி

### பிப்ரவரி 4 (2002)



கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, சென்னை, வடபழனி – கோடம்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தைத் தொடங்கியபோது, சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றினார்.

1953 முதல் கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று 18 முறை சிறை சென்றவர்.

பொதுக்குழு உறுப்பினராக, தலைமைக் கழக அலுவலக செயலாளராக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவராகவும், சென்னை நகர வளர்ச்சி மேம்பாட்டுக்குழுத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார்.

இவரது தொண்டினைப் பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள் தனது உடன்பிறப்புக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர்கள் ஒப்புதலோடு தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

தலைவர் பா. செல்வக்குமார்
113/1, பீமர் அக்ரஹாரம் மெயின் வீதி,
தாராபுரம் - 638656,
திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் ஆர். முத்துக்குமார்
17, மோளபாளையம்,
வீரணம்பாளையம்,
காங்கேயம் - 638701,
திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் க. சண்முகசுந்தரம்
302, தெற்குப்பாளையம்,
படியூர் அஞ்சல்,
காங்கேயம் - 638701,
திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1) இரா.குணசேகரன், 6/9, பால விநாயகர் கோயில் வீதி, பழையகோட்டை சாலை, காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 2) ஆர். ரமேஷ் 3/641, இமேஜ் கடை அருகில், புதுப்பை, வெள்ளக்கோவில் - 638111,திருப்பூர் மாவட்டம்.3) நா. கிருஷ்ணன் , கோவை மெயின் ரோடு, குண்டடம் அஞ்சல், தாராபுரம் வட்டம் - 638702, திருப்பூர் மாவட்டம். 4) வி.எஸ். செல்வராஜ் 255, அமராவதி நகர், சிவநாத புரம், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 5) எஸ். மகேந்திரன் சின்னாரிபாளையம், தேவராஜபட்டினம் அஞ்சல், குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம். 6)சு.மன்னர் மன்னன் 510, ஊத்துக்குளி ரோடு, மேலப்பாளையம், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.7)த. கிருஷ்ணகுமார் 49/3, கண்ணன் நகர், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

**தலைவர் -** குட்டி (எ) கே. சிவப்பிரகாஷ்
59/64, ராமநாதபுரம் குடியிருப்பு,
ஜமீன் ஊத்துக்குளி,
பொள்ளாச்சி - 642004,
திருப்பூர் மாவட்டம்.

**துணைத் தலைவர் –** எஸ். முருகநாதன்
3/360, ரஹீம் லே அவுட்,
உடுமலைப்பேட்டை - 642126,
திருப்பூர் மாவட்டம்.

**அமைப்பாளர் –** ர. பாபு (எ) சாகுல் அமீது
3/35, சோழமாதேவி,
மடத்துக்குளம்,
திருப்பூர் மாவட்டம் - 642113.

**துணை அமைப்பாளர்கள் –** 1) தென்றல் வி. செந்தில்குமார் 4/126, டீச்சர்ஸ் குடியிருப்பு,தேவனூர் புதூர் அஞ்சல், உடுமலைப் பேட்டை - 642207, திருப்பூர் மாவட்டம். 2) சி. வெள்ளியங்கிரி 3/222, ஆலமரத்தூர், மாலகோவில் தோட்டம்,கொங்கல் நகரம் அஞ்சல்,உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். 3)கா.கிருஷ்ண மூர்த்தி 12/196, மேற்கு வீதி, பாலப்பம்பட்டி, மடத்துக்குளம்,திருப்பூர் மாவட்டம். 4)மு.இலட்சுமணகுமார் 4/166, சின்னபுதூர், செல்லப் பம்பாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642207, திருப்பூர் மாவட்டம். 5) பா. சௌந்தரராஜன் 1/22, கிழக்கு வீதி, ரியவாள வாடி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642132, திருப்பூர் மாவட்டம்.

**தஞ்சை வடக்கு மாவட்டம்**
**கும்பகோணம் மாநகரம்**

**தலைவர் –** சொ. கோவிந்தராஜ்
2ஏ, குட்டியான் தெரு,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்** - இ. சுவாமிநாதன்
31, திருஞானசம்பந்தன் நகர்,
குமரன் தெரு,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**அமைப்பாளர் –** எஸ்.எச்.டி. வெங்கடேஷ்
2/77, துவரங்குறிச்சி கீழத் தெரு,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள் -** 1)கே. முத்துகிருஷ்ணன் 13, கீழத் தெரு, தாராசுரம், கும்பகோணம்,தஞ்சாவூர் மாவட்டம். 2) ஜி. ரமேஷ் 60/8, நாச்சியார் கோவில் வழி நடப்பு தெரு, மாதுளம் பேட்டை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3)மு. விக்னேஷ் 22, சர்வமானிய கீழ தெரு,மேலக்காவேரி,கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4)க. மணிகண்டன் 19/12, பாணாதுறை வடக்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.5) சே. சரவணன் தெற்கு மாதப்பா சந்து, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஏ.ஏ. ஆறுமுகம் அவருக்கு பதிலாக வ. அன்பரசு (97, வேல் நகர் முதல் தெரு, திருவண்ணா மலை.) அவர்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**திருச்சி தெற்கு மாவட்டம்**

திருச்சி தெற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.முகமது இலியாஸ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக எம்.ஏ. ஜெயனுத்தீன் (7/103, அக்பர் சாலை, துவாக்குடி மலை, திருச்சி.) அவர்கள், திருச்சி தெற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக அ. நாகூர்கனி (27, கைக்கொள்ளுவார் தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம்.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**மதுரை மாநகர் மாவட்டம்**

கழக நிர்வாக வசதிக்காக மதுரை மாநகர் மாவட்ட தொகுதி மறுசீரமைக்கப்பட்டதால், ஏற்கனவே மதுரை மாநகர் மாவட்ட அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ந.மணிகண்டன் அவர்களுக்கு பதிலாக வழக்கறிஞர் வி.ஆர். கலைநிதிஆதித்தியன் (ஏ2, காவலர் குடியிருப்பு, தெற்குவெளிவீதி, மதுரை625 001.) அவர்கள் மதுரை மாநகர் மாவட்ட அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-01-2026.

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்,
தி.மு.க.
அமைப்புசாராஓட்டுநர்அணி

### மக்கள் மனதில் முதல்வர்!

# இந்தியாவிலேயே இது போன்ற முதலமைச்சர் இல்லை!

## சமூக வலைதளங்களில் வைரலாகும் வீடியோ!

**சென்னை, பிப்.4 -**




**சமூக வலைதளங்களில் ஒரு இளம் பெண்ணின் வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில் செய்தியாளர் இந்தியா டுடே - சி வோட்டர் கருத்துக்கணிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அபரிமிதமான ஆதரவு என்று வெளியாகியிருப்பது குறித்து கேட்ட கேள்விக்கு பெண்மணி ஒருவர் 'மக்கள் மனதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிரந்தரமாக நிரம்பி இருப்பதே இந்த கருத்து கணிப்பு பிரதிபலித்துள்ளது' என்று பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.**

**சமூக வலைதளங்களில் வைரலாகும் வீடியோ பதிவை அப்படியே இங்கே பிரசுரம் செய்கிறோம். அது வருமாறு: -**

**செய்தியாளர்:** இந்தியா டுடே - சீ வோட்டர் சேர்ந்து நடத்திய தேர்தலுக்கான கருத்து கணிப்பில் தி.மு.க.வுக்கு 45 சதவிகிதம் வாக்குகள் பெற்று முதலிடம் கொடுத்து இருக்கிறார்கள் அது பற்றி உங்களின் கருத்து?

**பெண்:** இதனை வந்து, கருத்துக்கணிப்பை வைத்து தான் நாம் இந்த முடிவை பார்க்க வேண்டுமென்று கிடையாது.. மக்களுடைய மன நிலை கடந்த நான்கரை ஆண்டுகாலமாக எப்படி இருக்கிறது என்பது நம் எல்லோருக்குமே தெரியும். அவ்வளவு சிறப்பான ஒரு ஆட்சியை திராவிட மாடல் அரசு தந்து கொண்டிருக்கிறது.

அதற்கு மக்களுடைய மனசாட்சியே இதற்கு சாட்சி.

ஏன் அப்படி என்றால், வேறு ஒன்றும் கிடையாது. குறிப்பாக பெண்கள் சந்தோஷமாக இருந்தால் அந்த நாடு சந்தோஷமாக இருப்பதாக அர்த்தம். இன்றைக்கு இந்த 'திராவிட மாடல்' அரசு செய்கிற அத்தனை சாதனைகளும் கொண்டு வரப்போகின்ற அத்தனை திட்டங்களும் மகளிரை சார்ந்து, அல்லது மகளிரை சுற்றியே இருக்கிறது.

அதனை அழகாக முதல்வர் சொல்கிறார். இது 'மகளிர்க்கான உரிமை' என்று அவர் கொண்டு வரக் கூடிய திட்டங்களை சொல்கிறார்.

இன்னொன்று என்ன சொல்கிறார் என்றால், இது மகளிர் பெறக் கூடிய நன்மைகள்; எதற்குதவுது என்றால், மகளிரை பங்குதாரர் என்று சொல்கிறார்.

**இந்த மாதிரி எல்லாம் ஒரு முதலமைச்சர் வேறு எந்த மாநிலத்திலும் இப்போ மட்டும் கிடையாது, வேறு எத்தனை ஆண்டுகள் கழித்து பார்ப்பதற்கு - மக்கள் சந்திப்பதற்கு வாய்ப்பே கிடையாது. இப்படி ஒரு முதலமைச்சரை கட்டாயமாக தமிழ்நாட்டு மக்கள் இழப்பதற்கு வாய்ப்பே கிடையாது.**

இவ்வாறு அப்பெண்மணி பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில் வி. கே.கே.மேனன் சாலையில் இருந்து அமைதிப் பேரணியாக வந்து காந்திபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, மாநில தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வே. முனியாண்டி

### பிப்ரவரி 4 (2016)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முகவை மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் – ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவர் – திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைமைக் கழகப் பேச்சாளராக செயல்பட்டு, கழகக் கொள்கைகளை தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் பிரச்சாரப் பணியாற்றினார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**